RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 178 | ஜூலை.4 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “ஆளுநருக்கு திட்டங்களை ஆய்வு செய்யும் அதிகாரம் இல்லை”

## அமைச்சர் நிர்மல் குமார் காட்டம்

மதுரை: ஜூலை.4-

“எந்த அதிகாரமும் இல்லாத ஆளுநர் எந்த திட்டத்தையும் ஆய்வு செய்ய உரிமை இல்லை. அதை தவெக அரசு என்றைக்கும் அனுமதிக்காது,” என அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் கடும் கண்டனங்களை பதிவு செய்தார்.

முன்னதாக, நேற்று மதுரை சென்ற ஆளுநர் அர்லேகர் மதுரை மாவட்ட ஆட்சியர், காவல் ஆணையரை அழைத்து அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை ஆய்வு நடத்தியதாக தகவல் வெளியானது. இதற்கு பல்வேறு அரசியல் கட்சியினரும் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், “எந்த அதிகாரமும் இல்லாத ஆளுநர் எந்த திட்டத்தையும் ஆய்வு செய்ய உரிமை இல்லை. அதை தவெக அரசு என்றைக்கும் அனுமதிக்காது,” என அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் மதுரையில் கடும் கண்டனங்களை பதிவு செய்தார்.

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் நடைபெற்றது. தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல் குமார், உயர் கல்வித் துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுத் தலைவரும் எம்பியுமான சு.வெங்கடேசன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

அப்போது பேசிய அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், “இக்கூட்டத்தில் மத்திய, மாநில அரசு திட்டங்களை செயல்படுத்தும் முறைகள், பிரச்சினைகள், துறைகளிடையே ஒருங்கிணைப்பு குறித்தும் விவாதிக்க உள்ளோம். மக்களுக்கு விரைவாக திட்டங்களை கொண்டுபோய் சேர்க்க வேண்டும். அதில் துறைகளுக்கு இடையேயுள்ள பிரச்சினைகளை இடையூறுகளை சரி செய்துவிட்டு ஒவ்வோர் ஆண்டுக்கான இலக்குகளையும் முடிக்க வேண்டும். மக்கள் நலன் சார்ந்த விஷயங்களில் அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அவர்களது அதிகாரத்துக்கு உட்பட்டு ஆய்வு செய்யலாம். எந்த அதிகாரமும் இல்லாத ஆளுநர், எந்த திட்டத்தையும் ஆய்வு செய்ய உரிமை இல்லை. அதை இந்த அரசு என்றைக்கும் அனுமதிக்காது. தேவையில்லாமல் ஆளுநர், அரசின் நிர்வாகத்தில் தலையிட்டால் கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்படும்.

கண்டிப்பாக எந்த அதிகாரிகளும் அரசின் அனுமதி பெறாமல் ஆளுநருக்கு ஒத்துழைப்பு கொடுக்கக் கூடாது என்பதை அரசின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.



மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இருக்கும்போது ஆளுநர் தேவையில்லாமல் ஆய்வு செய்யக் கூடாது. அவ்வாறாக தலையிடுவது தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தும். அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது.” என்று கூறினார்.

முன்னதாக, இக்கூட்டத்தை தொடங்கி வைத்து சு.வெங்கடேசன் எம்.பி பேசியது: “இக்கூட்டத்தின் நோக்கம் மிக உயரியது. மத்திய, மாநில அரசு மற்றும் கிராம பஞ்சாயத்து ஆகியவற்றுக்கு அரசியல் சாசனம் தனித்தனி உரிமைகள் கொடுத்துள்ளது. இந்த உரிமைகள் ஒன்றோடொன்று முரண்பட்டு திட்டங்கள், பயனாளிகள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது. அதற்காக மத்திய, மாநில அரசின் திட்டங்களுக்கும் கிராம பஞ்சாயத்து உரிமைகளுக்கு இடையில் எந்த முரணும் ஏற்படாமல் நிர்வாகத்தை சிறப்பாக கொண்டுசெல்வதன் அடிப்படைதான் இந்தக் கூட்டம், இந்தச் சட்டம்.

குறிப்பாக சொல்வதென்றால் மத்திய அரசின் 39 அமைச்சகங்களுக்கு கீழே வருகிற 96 திட்டங்களை ஆய்வு செய்வதற்கான அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற அமைப்பு ‘திசா’. இது மிக உயரிய அமைப்பு. இது அரசியல் மேடையல்ல. மாவட்டத்தில் மத்திய, மாநில அரசு திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டும். துறைகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பு முறையாக இருக்க வேண்டும். ஆனால் அதுதான் பிரச்சினையாக இருக்கிறது.

ஒரு துறை மட்டும் தனித்து செயல்பட முடியாது. பல துறைகளின் உடன்பாடோடுதான் ஒரு திட்டம் செயல்படுத்த முடியும். எனவே துறைகளுக்காக ஒருங்கிணைப்பு மிக முக்கியம். அந்த அடிப்படையில் இங்கே கொடுக்கப்படுகிற உத்தரவுகள் சிறப்பாக செய்யப்பட வேண்டும். அப்படி செய்வதன் மூலம் மதுரை மாவட்டத்தின் திசா கூட்டம் என்பது கடந்த காலங்களில் பல மாவட்டங்களை ஒப்பிடும்போது மிகச் சிறப்பாக ஆக்கப்பூர்வமாக பணி செய்திருக்கிறோம். இந்தப் பணி தொடர வேண்டும்.

2வது மிக முக்கியமான விஷயம். நேற்றைய தினம் மதுரைக்கு வந்த தமிழக ஆளுநர் சில குறிப்பிட்ட மத்திய அரசின் திட்டங்கள் சார்ந்து ஒரு ஆய்வை நடத்தியதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அதன் தொடர்ச்சியாக அப்படி ஆய்வு நடைபெறவில்லை, நாங்கள் மரியாதை நிமித்தமாக மட்டுமே சந்தித்தோம் என்று மாவட்ட நிர்வாகம் விளக்கம் அளித்துள்ளது. நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை.

ஆனால், ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த கடமைப்பட்டு இருக்கிறேன். மத்திய அரசின் எந்தவொரு திட்டத்தையும் ஆய்வு செய்வதற்கான சட்ட உரிமை எங்களுக்கு (எம்பிக்கள்) மட்டும்தான் இருக்கிறது. அந்தச் சட்டம் வழங்கியிருக்கிற குழுவின் தலைவர் நான். இங்கே இருப்பவர்கள் குழு உறுப்பினர்கள்.

இந்த அரங்கத்தை தாண்டி வெளியில் ஒரு குறிப்பிட்ட மத்திய துறையின் அமைச்சர் அவரது துறையில் ஆய்வு செய்யலாம். ஆனால் பல துறைகளில் ஆய்வு நடத்துவதற்கு இந்திய அரசியல் சாசனம் எங்களுக்கு மட்டுமே உரிமை வழங்கியிருக்கிறது. எங்கள் உரிமையை வேறு யார் எடுக்க நினைத்தாலும் அதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். அதை இந்த நேரத்தில் தெளிவாக சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவேளை அப்படி யாராவது ஆய்வு நடத்த அதிகாரிகளை அழைத்தால் எந்த அதிகாரியும் பங்கெடுக்கக் கூடாது. அப்படி பங்கெடுத்தீர்கள் என்றால் அடுத்த ‘திசா’ கூட்டத்தில் உங்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டு அது குறித்து விளக்கம் கேட்கப்படும்.

எனவே, அரசியல் சாசனம் சட்டம் வழங்கியிருக்கிற அனைத்து துறைகளையும் ஆய்வு செய்கிற 39 அமைச்சகத்திற்கு கீழே வருகிற 96 துறைகளை ஆய்வு செய்கிற அமைப்பு மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு கண்காணிப்பு குழுதான். இது மதுரை மாவட்டத்தில் நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்படும் என்பதை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் அனைத்து திட்டங்களையும் சிறப்பாக முன்னெடுக்கும் இந்த கூட்டம் அதன் மீதான விவாதங்கள் பயன்படும் எனச் சொல்லிக் கொள்கிறேன்” என்றார்.

## ராமர் கோயில் நிதி முறைகேடு விவகாரத்தில் பிரதமர் மோடி மவுனம் ஏன்? : காங்கிரஸ் கேள்வி

புதுடெல்லி: ஜூலை.4-

அயோத்தி ராமர் கோயில் நன்கொடைகளில் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் குறித்து பிரதமர் நரேந்திர மோடி மவுனம் காப்பது பாஜகவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகிறது என்று காங்கிரஸ் கடுமையாக சாடியுள்ளது.

இந்த விவகாரத்தில் உத்தபிரதேச அரசின் சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரணை நேர்மையாக நடைபெற வாய்ப்பில்லை என்பதால், உச்ச நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பில் சிபிஐ விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், “நரேந்திர மோடி நாட்டின் பிரதமரானதற்கு ராமர் கோயில் விவகாரமும் ஒரு காரணம். எனவே இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது. தற்போது அங்கு மிகப்பெரிய நன்கொடை திருட்டு நடந்துள்ள போதிலும் பிரதமர் அமைதி காப்பது ஏன்? பாஜகவினர் தங்களின் அரசியல் லாபத்திற்காகக் கடவுளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது" என்று குற்றம் சாட்டினார்.

மேலும் முன்னதாக இம்முறைகேடு தொடர்பாகப் பிரதமர் மோடிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இந்த ஊழல் கோடிக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கைக்கு இழைக்கப்பட்ட துரோகம் என்று கே.சி. வேணுகோபால் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய அரசால் நியமிக்கப்பட்ட ராமர் கோயில் அறக்கட்டளைக்கு எதிராக, மாநில அரசின் கீழ் உள்ள சிறப்பு புலனாய்வுக் குழு நேர்மையான விசாரணையை நடத்த முடியாது என்றும், இதில் முக்கியப் புள்ளிகளைக் காப்பாற்ற முயற்சி நடப்பதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். முறைகேடுகளைக் கேள்வி கேட்பவர்களை உபி முதல்வர் யோகி ஆதித்யநாத் விமர்சிப்பது, குற்றவாளிகளை நியாயப்படுத்துவது போல் உள்ளது என்றும் வேணுகோபால் சாடியுள்ளார்.

இதற்கிடையில், இந்த நிதி முறைகேடு தொடர்பாக அறக்கட்டளையின் முன்னாள் பொதுச் செயலாளர் சம்பத் ராய், முன்னாள் அறங்காவலர் அனில் மிஸ்ரா மற்றும் நிர்வாகி கோபால் ராவ் உள்ளிட்டோருக்கு எதிராக பைசாபாத் வழக்கறிஞர்கள் சங்கம் அயோத்தி காவல்துறையிடம் புதிய புகார் ஒன்றை அளித்துள்ளது. முன்னதாக ஜூன் 25 அன்று இந்த விவகாரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சம்பத் ராய் மற்றும் அனில் மிஸ்ரா ஆகியோர் தங்களின் பதவிகளை ராஜினாமா செய்தது குறிப்பிடத்தக்கது. தற்போது உபி அரசு தனது சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை காலத்தை மேலும் 15 நாட்களுக்கு நீட்டித்துள்ளது.

## “ஆணவம் அழிவுக்கு வழி” அனிதா ராதாகிருஷ்ணன் கைதுக்கு ஸ்டாலின், உதயநிதி, கனிமொழி கண்டனம்

சென்னை: ஜூலை.4-

திமுக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைதுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், எம்.பி கனிமொழி ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “முதலவரை அவதூறாகப் பேசினார் என்று முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை கைது செய்துள்ளது ‘டேக் டைவர்ஷன்’ அரசு. தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பணியில் ஈடுபட்டு இருந்தவரை, அவசர அவசரமாகக் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?

சினிமா ஆக்ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கிறார் முதல்வர். கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்மணி திருவைகுண்டம் தவெக சட்டமன்ற உறுப்பினர் மேல் கூறியுள்ள புகாரில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத ‘தூயசக்தி ஆட்சி’, அந்த வழக்கில் ஏன் இந்த அவசரத்தைக் காட்டவில்லை?







தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கொலை, கொள்ளைகளையும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களையும் தடுக்க வக்கில்லாமல் அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசின் மாற்றம் இதுதானா?

அவதூறு வழக்கில் கைது செய்வதாக இருந்தால், இன்றைய அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கு எல்லாம் எத்தனை பேரைக் கைது செய்வது?

வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், குதிரை பேரத்தின் மூலமாகத் தனது நாற்காலியைத் தக்க வைத்து, விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளைக் கைது செய்து காலம் கடத்தி விடலாம் என நினைக்கிறார் முதல்வர். ஆணவம் அழிவுக்கு வழி” என்று அவர் தெரிவித்துள்ளார்.

திமுக எம்.பி கனிமொழி தனது எக்ஸ் தள பக்கத்தில், “முன்னாள் அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அனிதா ராதாகிருஷ்ணனை, தவெக அரசின் காவல் துறை கைது செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதியில் ஆய்வுப் பணியில் இருக்கையில் அராஜகமான முறையில் அவரை கைது செய்திருக்கிறது, இந்த தவெக அரசு. இதுபோன்ற அடக்குமுறைகளுக்கு எல்லாம் ஒருபோதும் திமுக அடிபணியாது” என தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில், “முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணனை காவல் துறை கைது செய்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன். தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக் காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது சோஃபா மாடல் அரசு.

அவதூறு பேசி பொய் பழிகளை அள்ளி வீசுவது மட்டும் தான் அரசியல் என்று செயல்படும் ஆளுங்கட்சியின் இந்த அராஜகப் போக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொய் வழக்காலும் கைது நடவடிக்கைகளாலும் திமுகவை முடக்கலாம் என்று நினைக்கும் இந்த ரீல்ஸ் அரசின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது” என்று கூறியுள்ளார்.

## ரஷ்யா ட்ரோன் தாக்குதல்: உக்ரைனில் 18 பேர் உயிரிழப்பு

கீவ், ஜூலை.04-

உக்ரைன் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு நடத்திய ட்ரோன் தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்யாவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை குறி வைத்து உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தி வந்தது. இதன் காரணமாக ரஷ்யாவில் கடந்த 4 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. எனவே, உக்ரைனுக்கு மிகப் பெரியளவில் பதிலடி கொடுக்க ரஷ்யா முடிவு செய்தது.

உக்ரைன் மீது நேற்று முன்தினம் இரவு 74 ஏவுகணைகள் மற்றும் 496 ட்ரோன்களை ரஷ்யா ஏவியது. இவை உக்ரைனில் 30 இடங்களைத் தாக்கின. இதில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் தீப்பற்றின. 20க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் சேதமடைந்தன. இந்த தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர், 90க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

மீட்புப் பணிகள் தொடர்வதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என கூறப்படுகிறது. ரஷ்யாவின் தாக்குதலை முறியடிக்க பேட்ரியாட் போன்ற வான் பாதுகாப்பு ஏவுகணைகளைத் தரும்படி நட்பு நாடுகளிடம் உக்ரைன் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## தமிழ்நாட்டில் மோசமான ஆட்சி நடக்கிறது: தவெக அரசு மீது எழிலரசன் குற்றச்சாட்டு

சென்னை, ஜூலை.04-

தமிழ்நாட்டில் மோசமான ஆட்சி நடக்கிறது என திமுக கொள்கை பரப்பு செயலாளர் எழிலரசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர்; த.வெ.க. ஆட்சியில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. த.வெ.க. ஆட்சியின் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை திசைதிருப்பும் வகையில் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டுள்ளார். அனிதா ராதா கிருஷ்ணனை கைது செய்து இழுத்துச் சென்றுள்ளது காவல்துறை.

முன்ஜாமின் மறுத்து ஒரு மணி நேரத்திற்குள் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி மீது எந்த புகாரும் இல்லாத நிலையில் அவரை கைது செய்ய த.வெ.க. அரசு முயற்சிக்கிறது. ஸ்ரீவைகுண்டம் தவெக எம்எல்ஏ மீது அளிக்கப்பட்ட புகார் குறித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? எதிர்க்கட்சியினர் மீது பொய் வழக்கு, அவதூறு பரப்பலாமா என்றுதான் தவெக அரசு யோசிக்கிறது. இடைத் தேர்தலில் ஜெயிப்பதற்காக இதுபோன்ற அத்துமீறலில் த.வெ.க. அரசு ஈடுபடுகிறது.

இடைத்தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் பணிகளை முடக்க கைது என்ற பெயரில் த.வெ.க. அரசு சதி திட்டம் தீட்டுகிறது. பெரும்பான்மை வேண்டும் என்று ஆளுநர் கூறிய நாளில் குதிரை பேரத்தை தொடங்கிவிட்டார் விஜய். ஆட்சி அமைப்பதற்கு முன்பு தொடங்கிய த.வெ.க.வின் குதிரைபேரம் தற்போது வரை தொடர்கிறது. குதிரைப் பேரத்தை தொடங்கி வைத்தது முதலில் முதலமைச்சர் விஜய்தான். விஜய்யின் குதிரை பேரம் குறித்து மதிமுக பொதுச் செயலாளர் வைகோ பேசியுள்ளார். முதலமைச்சர் விஜய்தான் ஆனால் ஆக்டிங் முதலமைச்சர் ஆதவ்அர்ஜூனாதான் என்று கூறினார்.

# ஊத்துக்கோட்டையில், வசந்த் அண்ட் கோ புதிய கிளையை தமிழ் செல்வி வசந்தகுமார், ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்





திருவள்ளூர், ஜூலை.04-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை, அரசு போக்குவரத்து பணிமனை அருகே கட்டப்பட்ட பிரம்மாண்ட வசந்த் அன் கோ திறப்பு விழாவில் வசந்த் அன் கோ நிர்வாக பங்குதாரர்கள் தமிழ் செல்வி வசந்தகுமார், கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்தும், குத்துவிளக்கு ஏற்றி விற்பனையை துவக்கி வைத்தனர்.

மேலும் டிவி,பிரிட்ஜ்,வாஷிங் மெஷின், செல்போன்,லேப்டாப் உள்ளிட்ட எலக்ட்ரானிக் சாதனங்களும், மற்றும் கட்டில் மெத்தை உள்ளிட்ட வீட்டு உபயோக பொருட்களும் விற்பனைக்கு தொடங்கியது.

மேலும் 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு தங்க நாணயம் இலவசமாக வழங்கப் படும் என்பதால் முதல் நாளே ஊத்துக்கோட்டை, அதன் சுற்றுவட்டார பகுதியிலிருந்து பொது மக்கள் போட்டி போட்டுக் கொண்டு ஏராளமான வாடிக்கையாளர்கள் கடையில் பொருட்களை வாங்க வருகை புரிந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடையின் பணியாளர்களுடன் கேக் வெட்டிக் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்,

இதில் கிளை மேலாளர் கிரன், Stockist, கிஷோர், மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் விநாயகமூர்த்தி, ஊத்துக்கோட்டை காங்கிரஸ் பேரூராட்சி தலைவர் கோவிந்தசாமி, துணைத் தலைவர் அந்தோணி சேவியர், பொறுப்பாளர் கருணைக்கண்ணன், ஊத்துக்கோட்டை காங்கிரஸ் மகளிர் அணி தலைவி அம்சா, செயலாளர் பூபாலன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீதேவி எல்லையம்மன் திருக்கோவில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா




சென்னை, ஜூலை.04-

சென்னை, அடையாறு வண்ணா துரை, எல்லை யம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி எல்லையம்மன் திருக்கோவில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது, எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீதேவி எல்லம்மன்னுடைய தனிப்பெருங்கருணையும் இச்சாசக்தி ஞானசக்தி கிரியா சக்தியாகவும் கேட்ட வரங்களை வாரி வழங்குகின்ற தாயாகவும் அனைத்து எல்லைகளுக்கு அதிபதியாகவும் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகிய ஸ்ரீதேவி எல்லையம்மன் ஆலயம் மிக சிறப்பாக திருப்பணிகள் துவங்கி வர்ணங்கள் பூசப்பட்டு நூதனமாக ஸ்ரீதேவி கோலவிழி யம்மன் மற்றும் ஆலயத்தில் எழுந்திருக்கும் அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் அனைத்து கோபுரங்களும் புனரமைக்கப்பட்டு நிகழும் மங்களகரமான பராபவ வருடம் ஆனி மாதம் திருதீயைதிதி திருவோணம் நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் கன்னியா லக்னத்தில் அன்னை ஸ்ரீதேவி எல்லையம்மன் மற்றும் ஸ்ரீதேவி கோலவிழியம்மன் விநாயகர் மற்றும் அனைத்து பரிவார தெய்வங்களுக்கும் ஆன்மீக பக்தர்கள் பகுதி பொதுமக்கள் முன்னிலையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர், வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப் பட்டது, ஆலயத் தலைவர் பன்னீர் செல்வம், செயலாளர் வெங்கடாசலம், பொருளாலர் அங்கமுத்து, மற்றும் ஆலைய விழாக்குழுவினர் கும்பாபிஷேகத்தை சிறப்பாக நடத்தினர்.

# குன்னூரில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் போக்சோ சட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்

## நீதிபதி மற்றும் வழக்கறிஞர்கள் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது





குன்னூர், ஜூலை.04-

குன்னூர் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சார்பில், போக்சோ சட்டம் மற்றும் பெண்களுக்கான சட்டப் பாதுகாப்புகள் குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்த முகாமிற்குச் சார்பு நீதிபதி மேகலா மைதிலி தலைமை தாங்கினார்.

நிகழ்வின் தொடக்கமாக, நீலகிரி மாவட்ட சமூகத் தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் தலைவர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அதனைத் தொடர்ந்து, சார்பு நீதிபதி திருமதி மேகலா மைதிலி அவர்கள் உரையாற்றுகையில், சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் செயல்பாடுகள் மற்றும் முக்கியத்துவத்தை எடுத்துரைத்ததுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகச் சட்ட ரீதியாகத் தங்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது குறித்து மிகவும் விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்ற வழக்கறிஞர் திருமதி ஸ்ரீடா ஷாலினி மற்றும் வழக்கறிஞர் திரு. ராமச்சந்திரன் ஆகியோர் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர். இதில் வழக்கறிஞர் திரு. ராமச்சந்திரன் அவர்கள், போக்சோ (POCSO) சட்டத்தின் பிரிவுகள், அதன் முக்கியத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு உரிமைகள் குறித்து விரிவான விளக்கங்களை வழங்கினார்.

இந்தச் சட்ட விழிப்புணர்வு முகாமில், மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண்கள் திரளாகக் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை 'வெளிச்சம் அறக்கட்டளை' மற்றும் அதன் நிர்வாகி டெய்சி ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர். நிறைவாக, நீலகிரி மாவட்ட சமூகத் தன்னார்வலர்கள் கூட்டமை ப்பின் மாவட்ட செயலாளர் கண்டோன்மென்ட் வினோத் குமார் அவர்கள் நன்றி கூறினார்.

# சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் உலக பிளாஸ்டிக் ஒழிப்பு தினம்;மஞ்சள் துணிப்பையுடன் மாணவர்களின் பிரம்மாண்ட விழிப்புணர்வு பேரணி





காளையார்கோவில், ஜூலை.04-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஒன்றியம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சேம்பாரில் உலக பிளாஸ்டிக் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்ச் சிக்கு பள்ளி யின் தலைமை ஆசிரியர் திரு. சுரேஷ் தலைமை தாங்கினார். பிளாஸ்டிக் மாசுபாட்டால் சுற்றுச்சூழல், நீர்நிலைகள், வன விலங்குகள் மற்றும் மனிதர்களின் உடல்நலம் கடுமையாக பாதிக்கப்படுவதை எடுத்துரைக்கும் வகையில் மாணவர்களுக்கு முதலில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. அதன் பின்னர், பிளாஸ்டிக் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம் என்ற உயரிய நோக்கத்துடன் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பள்ளியின் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகிய ஐந்து அணிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் மட்டுமின்றி, பள்ளியின் அனைத்து மாணவர்களும் மஞ்சள் நிற துணிப்பைகளை கையில் ஏந்தியவாறு ஊர்வலமாகச் சென்றனர். மேலும், "பிளாஸ்டிக்கை ஒழிப்போம் - பூமியைக் காப்போம்", "துணிப்பையைப் பயன்படுத்துவோம் - இயற்கையைப் பாதுகாப்போம்", "இன்று ஒரு துணிப்பை - நாளை ஒரு பசுமையான உலகம்", "பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் - சுற்றுச்சூழலை நேசிப்போம்" போன்ற விழிப்பு ணர்வு முழக்கங்களை எழுப்பியபடி கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

மாணவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான மஞ்சள் துணிப்பைகளை ஏந்தியிருந்தது பேரணியின் சிறப்பம்சமாக அமைந்தது. இந்தக் காட்சி பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்ததுடன், பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக துணிப்பையைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை அனை வருக்கும் நினைவூட்டியது. பொது மக்கள் மாணவர்களின் முயற்சியை பாராட்டி, தாங்களும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து துணிப்பைகளைப் பயன்படுத்த உறுதி யளித்தனர்.

நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் சுரேஷ் சிறப்புரையாற்றுகையில், "சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அரசு அல்லது தனி அமைப்புகளின் பொறுப்பு மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமையாகும். ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, துணிப்பை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைப் பயன்படுத்தும் பழக்கத்தை நாம் இன்று முதல் கடைப்பிடிக்க வேண்டும். மாணவர்கள் தங்கள் வீடுகள், பள்ளி மற்றும் சமூகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் தூதுவர்களாக செயல்பட்டு, பசுமையான எதிர்காலத்தை உருவாக்க முன்வர வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

மேலும், மாணவர்கள் தங்களது குடும்பத்தினர் மற்றும் அண்டை வீட்டாரிடமும் பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமைகள் குறித்து எடுத்துரைத்து, இயற்கையை பாதுகாக்கும் நல்ல பழக்கங்களை அனைவரிடமும் பரப்ப வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் திரு. காளீஸ்வரன், திரு. முத்துக்குமார், திரு. முருகன், திருமதி. சகாய செல்வி, திருமதி. தனபாக்கியம், திருமதி. பாரதி மலர், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள், சுகாதாரப் பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், "பிளாஸ்டிக் இல்லா பள்ளி - பசுமையான பள்ளி, பிளாஸ்டிக் இல்லா கிராமம் - வளமான கிராமம்" என்ற இலக்கை அனைவரும் உறுதிமொழியாக ஏற்றுக்கொண்டனர். மாணவர்களின் ஒழுக்கமான அணிவகுப்பு, உற்சாகமான பங்கேற்பு மற்றும் மஞ்சள் துணிப்பையுடன் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணி, உலக பிளாஸ்டிக் ஒழிப்பு தினக் கொண்டாட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்த்ததுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஆழமாகப் பதியச் செய்தது. பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் நன்றியுரை கூறினார்.

# குறுவை நெல் சாகுபடிக்கு 100% மானியம்; விவசாயிகள் பயன்பெற அழைப்பு





சிவகங்கை, ஜூலை. 04-

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து நடைபெற்ற செய்தியாளர் பயணத்தில், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சுந்தரமாகலிங்கம் தகவல் தெரிவித்தார்.

அவர் கூறுகையில், கோடை பருவத்தில் இயந்திரங்கள் மூலம் அல்லது நேரடி நெல் விதைப்பு மேற்கொள்ளும் விவசாயிகள், உழவர் செயலி வாயிலாக தேவையான ஆவணங்களுடன் பதிவு செய்தால் மானியம் வழங்கப்படும் என்றார். விண்ணப்பங்கள் வட்டார வேளாண் அலுவலர்களால் சரிபார்க்கப் பட்டு தகுதியான விவசாயிகள் தேர்வு செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 80 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி நடைபெறுகிறது. இதில் கோடை பருவத்தில் 1,500 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் நெல் இயந்திர நடவு மற்றும் நேரடி நெல் விதைப்புக்கு 100 சதவீத மானியமாக ஏக்கருக்கு ரூ.4,000 வழங்கப்படுகிறது. இதற்காக 300 ஏக்கருக்கு ரூ.12 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், 10 ஆண்டுகளுக்குட்பட்ட நெல் விதைகளுக்கு 50 சதவீதம் அல்லது கிலோவுக்கு ரூ.20, 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரகங்களுக்கு கிலோவுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது. புதிய நெல் ரகங்களின் சான்று விதை உற்பத்திக்கு கிலோவுக்கு ரூ.8 மானியம் வழங்கப்படுவதுடன், நெல் நுண்ணூட்டம் மற்றும் உயிர் உரத்திற்கும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

குறுவை நெல் சாகுபடி திட்டங்களுக்காக மொத்தம் ரூ.23.66 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், விவசாயிகள் இந்த மானியத் திட்டங்களை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இணை இயக்குநர் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# பொறுப்பேற்பு



■ மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரியாக க. செல்லத்துரை, எம்.ஏ. பி. எல்., பொறுப்பேற்றுக் கொண்டார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஊராட்சி ஒன்றியம், கரைப்புதூர் ஊராட்சியில் கட்டப்பட்டு வரும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.உடன் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சதீஸ்குமார் உடனிருந்தார்.

# பொறுப்பேற்பு



■ மதுரை மாநகராட்சி செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக நா.விஜயகுமார் பொறுப்பேற்றுக்கொண்டார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாநகராட்சி, தென்னம்பாளையம் சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தில் தூய்மை பணியாளர்களுடன் கலந்துரையாடினார்கள்.

# திருப்புவனம் பேரூராட்சி தலைவரை நோக்கி பெண் எழுப்பிய அடுக்கடுக்கான கேள்விகள்: சமூக ஊடகங்களில் வைரலாகும் வீடியோ

திருப்புவனம், ஜூலை.04-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் பேரூராட்சி பகுதியில் நிலவும் அடிப்படை வசதிகள் குறித்த குறைபாடுகளை சுட்டிக்காட்டி, அப்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் வெளியிட்ட வீடியோ சமூக ஊடகங்களில் வேகமாக பரவி வருகிறது.

அண்மையில் நடைபெற்ற போதைப் பொருள் விழிப்புணர்வு முகாம் ஒன்றில் பேரூராட்சி தலைவர் கலந்துகொண்டதை முன்வைத்து இந்த வீடியோ பதிவிடப்பட்டுள்ளது. அதில், "தேர்தல் சமயத்தில் வாக்கு கேட்டு வரும்போது மட்டும் வாக்குறுதிகளை அளித்துவிட்டு, வெற்றி பெற்ற பிறகு மக்களின் கோரிக்கைகளை காதுகொடுத்து கேட்பதில்லை" என்று அப்பெண் குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், தங்கள் பகுதியில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் உள்ள பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகளை அவர் பட்டிய லிட்டுள்ளார். குறிப்பாக:

* சரியான சாலை வசதிகள் இல்லாமை
* முறையான சாக்கடை மற்றும் வடிகால் வசதி இல்லாத நிலை
* குப்பைகளை அகற்றுவதற்கான போதிய ஏற்பாடுகள் இல்லாதது
* அடிக்கடி ஏற்படும் மின்தடை மற்றும் மின்சாரக் குறைபாடுகள்
* பொதுமக்களுக்கான போக்குவரத்து மற்றும் பேருந்து வசதிகள் பற்றாக்குறை

இத்தனை பிரச்சினைகள் இருக்கும் போது, மக்கள் தங்களின் தேவைகளுக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வருவதாகவும், ஆனால் நிர்வாகத் தரப்பில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்றும் அவர் அந்த வீடியோவில் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றக் கோரி, பெண் ஒருவர் பேரூராட்சித் தலைவரை நோக்கி அடுக்க டுக்கான கேள் விகளை எழுப்பும் இந்த வீடியோ தற்போது இணையத்தில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

# தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சபரி ஐங்கரன் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு




பெரியகுளம், ஜூலை.04-

தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் .க.சபரி ஐங்கரன் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, ஆய்வகம், மருந்தகம் உள்ளிட்ட இடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் மருத்துவ ஆலோசனை மையத்திற்கு சென்று மருத்துவ சிகிச்சைப் பெற வருகை புரிந்தவர்களிடம் மருத்துவ ஆலோசனை வழங்குவதன் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும், மருத்துவமனை வளாகத்தில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வழங்குவதன் விவரம் குறித்தும், பொது சுகாதார வளாகம் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என பார்வையிட்டதுடன், நாள்தோறும் சிகிச்சைக்கு வரக்கூடிய மக்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட வேண்டும் என மருத்துவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

பின்னர் மருத்துவர்களிடம் தெரிவிக்கையில், ஒவ்வொரு நாளும் சிகிச்சை பெற வருபவர்களில் குறிப்பிட்ட நோய்களுக்கான சிகிச்சை வேண்டி ஒரே பகுதியில் இருந்து வருபவர்கள் என கண்டறிந்தால், அந்தப் பகுதிக்கு மருத்துவக் குழுவை அனுப்பி வைத்து அதற்கான நோய்த்தொற்று காரணங்களை கண்டறிந்து, தடுப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என மருத்துவர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆலோசனை வழங்கினார்.

தொடர்ந்து, பெரியகுளம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சென்று பார்வையிட்டதுடன், பள்ளி வளாகத்தின் அருகாமையில் வராக நதி செல்வதால் கரையோரத்தில் மதில்சுவர் அமைத்திட பள்ளி நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக் கொண்டதை யொட்டி, பொதுப்பணித்துறை மஞ்சளாறு வடிநிலக்கோட்டம் மூலம் கரையோரப் பகுதிகளில் மதில்சுவர் கட்டுவதற்கான திட்ட வரைவுகளை தயார் செய்ய அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

பின்னர் பள்ளிகளை ஒட்டியுள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் தடை செய்யப்பட்டப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதா என பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், கடைகளில் உள்ள விற்பனையாளர்கள் மற்றும் உரிமையாளர்களிடம் தடை செய்யப்பட்டப் பொருட்கள் விற்பனை செய்தால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்,இந்த ஆய்வின் போது, இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.கலைச்செல்வி, செயற்பொறியாளர் (மஞ்சளாறு வடிநிலக்கோட்டம்) சரவணன், நகராட்சி ஆணையாளர் (பெரியகுளம்) தமீஹா சுல்தானா, வட்டாட்சியர் (பெரியகுளம்) மருதுபாண்டி உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# தேசிய மருத்துவர்கள் தினம்: மானாமதுரையில் மருத்துவர்களுக்கு மாணவர்கள் வாழ்த்து

மானாமதுரை, ஜூலை.04-

தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் மருத்துவர் உடை அணிந்து, மானாமதுரை அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்களை சந்தித்து பொன்னாடை அணிவித்து, இனிப்புகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாணவர்கள் மருத்துவர்களின் சேவையை போற்றும் கவிதைகள் மற்றும் பொன்மொழிகளை தமிழ், ஆங்கில மொழிகளில் வாசித்தனர்.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் சாரதா செய்திருந்தார்.

# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படும் குடிநீர் பரிசோதனை



ஆண்டிபட்டி, ஜூலை.04-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பாலக்கோம்பை ஊராட்சியிலுள்ள ராயவேலூர் கிராமத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வைகை அணையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 250 ஊரக குடிநீர் திட்டத்திலிருந்து பாலக்கோம்பை ஊராட்சியால் பராமரிக்கப்படும் உள்ளூர் நீராதாரம் மூலம் ராயவேலூர் கிராமத்திற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ராயவேலூரில் குடிநீர் குழாய்கள் உடைந்து சாக்கடைநீர் கலப்பதால், குடிநீரில் புழுக்கள் இருப்பதாக வரப்பெற்றப் புகாரின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியத்துறைகளின் சார்பில்,ராயவேலூர் கிராமத்திலுள்ள தரைமட்ட நீர் தேக்கத் தொட்டி மற்றும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அனைத்தும் சுத்தம் செய்யப்பட்டு மற்றும் குழாய் உடைப்புகள் சரி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு சீரானசுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு வைகை அணையில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பராமரிக்கப்படும் குடிநீர் பரிசோதனை ஆய்வகத்திற்கு சோதனைக்கு அனுப்பபட்டுள்ளது என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பூர் மாவட்டம் இருசக்கர வாகனம் வாங்க மானியம் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது

திருப்பூர், ஜூலை.04-

திருப்பூர் மாவட்டம் இருசக்கர வாகனம் வாங்க மானியம் விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 18 வயது முதல் 60 வயது வரை உள்ள உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மானியத் தொகை ரூ.50,000/ வழங்க தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றும் பேஷ்இமாம்கள், ஆலிம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள் உள்ளிட்ட உலமாக்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. தற்போது மேற்படி திட்டத்தில் பயன் பெற விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் 30.06.2026 லிருந்து 15 நாட்கள் நீட்டிக்கப்படுகிறது. இரு சக்கர வாகனத்திற்கான மானியம் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் / சிறுபான்மையினர் நல அலுவலரிடம் படிவத்தினை பெற்று உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து ஒப்புதல் பெற்ற பின்னரே பயனாளி இரு சக்கர வாகனம் வாங்க வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் / சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் 15.07.2026ம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கவேண்டும் என மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்கூட்டம் (DISHA) எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் , உயர்கல்வித்துறை அமைச்சர் பெ.விஸ்வநாதன் , மதுரை நாடாளுமன்ற உறுப்பினர்.சு.வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்தமிழ் செல்வன் , மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா இ.ஆ.ப., , சட்டமன்ற உறுப்பினர்கள் அ.கல்லாணை (மதுரை வடக்கு) , எஸ்.ஆர்.தங்கப்பாண்டி (மதுரை மேற்கு) , சோ.கார்த்திகேயன் (மதுரை கிழக்கு) , எம்.வி.கருப்பையா (சோழவந்தான்) , எம்.எம்.கோபிசன் (மதுரை தெற்கு) , மதார் பதூருதீன் (மதுரை மத்திய) ,ம.விஜய் (உசிலம்பட்டி) , மாநகராட்சி மேயர்(பொ) துணை மேயர் நாகராஜன் , மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.

# நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நீலகிரி, ஜூலை.04-

நீலகிரி மாவட்டம் கூடலூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீமதுரை ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

நீலகிரி மாவட்டம், நடுவட்டம் பகுதியில் உள்ள நியாயவிலைக்கடையில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொது மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதி மக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார். அதனை தொடர்ந்து, கூடலூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீமதுரை ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு அங்கு பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் பொதுமக்களுக்கு செயல்படுத்த ப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். பின்னர், ஸ்ரீமதுரை ஊராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டு குழந்தைகள் வருகை பதிவேடு, எடை, உயரம் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, (VB G RAM G) விக்சித் பாரத் ரோஸ்கர் மற்றும் அஜீவிகா மிஷன் (கிராமின்) 125 நாள் வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.50 இலட்சம் மதிப்பில் ஸ்ரீமதுரை ஊராட்சிக்குட்பட்ட குண்டூர் முதல் மணலி வரை கால்வாய் தூர்வாரும் பணியினையும், ஓடக்கொல்லி பகுதியில் வன உரிமைகள் சட்டம் ஆறாவது மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.7.50 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலை பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அப்பகுதி பொதுமக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

மேலும், ஸ்ரீமதுரை அரசு மேல்நிலைப்பள்ளியின் சமையற்கூடம், சமையற்பொருட்கள் இருப்பு அறையினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடி, மண்வயல் பகுதியில் உள்ள துணை சுகாதார நிலையம் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டு, நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருந்துகளின் இருப்புகள் ஆகியவை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் , ஸ்ரீமதுரை ஊராட்சி பகுதியில் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (தலா ரூ.6 இலட்சம் மதிப்பில்) கட்டப்பட்டு வரும் 80 எண்ணிக்கையிலான வீடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை தரமாகவும் விரைவாகவும் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் அறிவுறுத்தி, மேம்பாலம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.64.96 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, கூடலூர் அரசு தலைமை மருத்துவமனையில், விபத்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, பச்சிளம் குழந்தைகள் சிகிச்சை பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, இரத்த பரிசோதனை பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ் ஆய்வின் போது, கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன், இணை இயக்குநர் (மருத்துவ நலப்பணிகள்) ராஜசேகரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ், கூடலூர் வட்டாட்சியர் முனீஸ்வர், கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சலீம்,பிரகாஷ், வட்ட வழங்கல் அலுவலர்கள் லதா (உதகை), நடேசன் (கூடலூர்) உட்பட பலர் உடனிருந்தனர்.

# குன்னூர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் குன்னூர் வட்டாரம்விரிவாக்க சீரமைப்பு திட்டம்




குன்னூர், ஜூலை.04-

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, குன்னூர் வட்டாரம் விரிவாக்க சீரமைப்புத்திட்டம் (2026 -2027) வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் விவசாயிகள் பயனடையும் வகையில் பயிற்சிகள், கண்டுணர்வு சுற்றுலாக்கள், செயல் விளக்கங்கள், பண்ணைப்பள்ளி மூலம் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண்மையில் நவீன சாகுபடி முறைகளை கற்று கொடுத்து வருகின்றனர்.

இவ்வகையில் 01.07.2026 அன்று சின்னபிக்கட்டி கிராமத்தில் கிஸான் கோஸ்தீஸ் நிகழ்ச்சியானது தோட்டக்கலை உதவி இயக்குநர் ம.விஜியலட்சுமி தலைமையின் கீழ் நடைபெற்றது. இதுகுறித்து அவர்கள் கூறுகையில் இந்நிகழ்ச்சி மூலமாக விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள். கலந்துரையாடி பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ள வழி வகை செய்கிறது என்றார்.

வேளாண் அறிவியல் நிலையத்திலிருந்து வருகை புரிந்த சுகந்தி நஞ்சில்லா சாகுபடி முறைகள், வேளாண் அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து பேசினார்.

வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையிலிருந்து வருகை புரிந்த உதவி வேளாண்மை அலுவலர் மகாலிங்கம் மானிய திட்டங்கள் குறித்தும் சந்தைபடுத்துதல் குறித்தும் விளக்கினார்.விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராக்கேஷ் அவர்கள் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் செயல்பாடுகள் குறித்து பேசினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான்போஸ்கோ தோட்டக்கலைத்துறையின் கீழ் செயல்படுத்துப்படும் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் அபினேஷ் மண்வளம் மற்றும் மண்மாதிரி எடுக்கும் வழிமுறைகுறித்து விளக்கினார். மேலும் அங்கக வேளாண்மையின் முன்னோடி விவசாயிகள் சுஞ்சையன் மற்றும் தேவராஜ் அவர்கள் தங்கள் வெற்றி கதையினை பிற விவசாயிகளிடம் பகிர்ந்து கொண்டனர். இதனால் கலந்து கொண்ட விவசாயிகள் அங்கக வேளாண்மை சாகுபடி செய்யவதற்கு ஊக்கம் பெற்றனர்.

மேலும் இந் நிகழ்ச்சியில் அமைத்த அங்கக வேளாண்மை விளைப்பொருட்களின் கண்காட்சி அரங்கம் பார்வையாளர்களை கவர்ந்தது இந்நிகழ்ச்சியில் முன்னால் கவுன்சிலர் சந்திரன் மற்றும் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# தே.மு.தி.க., மாவட்ட கழக செயலாளர் மாநிலக் கழக உயர்மட்ட குழு உறுப்பினரும் அனகை முருகேசன் பிறந்த நாள் விழா

## கட்சி நிர்வாகிகள் சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்



அனகாபுத்தூர், ஜூலை.04-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அடுத்த அனகாபுத்தூரில் வசித்து வரும் தேமுதிகவின் மாவட்ட கழக செயலாளர் மாநில கழக உயர்மட்ட குழு உறுப்பினருமான அனகை முருகேசன் அவர்களின் பிறந்தநாளை விழா அவர்களது இல்லத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது

அனகாபுத்தூரில் உள்ள அருள்மிகு ஸ்ரீ ஆலவட்டம்மன் ஆலயத்தில் மாவட்ட கழகச் செயலாளர் அனகை முருகேசனுக்கு பிறந்த நாளை அன்று சிறப்பு வழிபாடு செய்து அனைவருக்கும் காலை சிற்றுண்டி மாநில செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார், அனகாபுத்தூர் பகுதி மகளிர் அணி செயலாளர் மோகனா தேவி, அவைத்தலைவர் மணி ஆர்.சி.பாலாஜி, சாய் கிருஷ்ணன், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் கே ஜீவா, பம்மல் தெற்கு பகுதி செயலாளர் சரவணன், வின்சென்ட், பல்லாவரம் பகுதி செயலாளர் பழனி ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினார்கள்

அதனைத் தொடர்ந்து மாவட்ட கழக துணைச் செயலாளர் மா.செழியன் தெற்கு பகுதி செயலாளர் கேட்.எம் தர்மா, மாவட்ட மகளிர் அணி நிர்வாகி கலா ஆறுமுகம், மத்திய பகுதி துணைச் செயலாளர் சதீஷ் மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி வி.செந்தில் குமார், பொருளாளர் ஆர்.சிவாகுமார், மாவட்ட பிரதிநிதி வி.ரகு, 15வது வட்ட செயலாளர் ஜெயசீலன், 20வது வட்ட செயலாளர் கிளான்சி, 21வது வட்ட செயலாளர் மணி ஆகியோர் அனகை முருகேசனை சந்தித்து சால்வே அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்

# 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம்: சிவகங்கை மாவட்டத்தில் 3 லட்சம் குடும்பங்கள் பயனடைவு!





சிவகங்கை, ஜூலை.04-

தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் பொருளாதாரச் சுமைகளைக் குறைக்கும் வகையில், வீட்டு உபயோக நுகர்வோருக்கு 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கான அரசாணையில் முதலமைச்சர் தனது முதல் கையெழுத்திட்டார். இந்தத் திட்டம் உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் பொது மக்கள் பெரும் பயன் பெற்று வரு கின்றனர்.

திட்டத்தின் சிறப்பம்சங்கள்:

இரு மாதங்களுக்கு 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் அனைத்து வீட்டு மின் நுகர்வோர்களுக்கும் இந்த 200 யூனிட் வரை கட்டணமில்லா மின்சாரத் திட்டம் முழுமையாகப் பொருந்தும்.

இந்த விரிவாக்கப்பட்ட திட்டத்தின் மூலம் சுமார் 85 லட்சத்துக்கும் அதிகமான நுகர்வோரின் மின்கட்டணம் இரண்டு மாதங்களுக்கு ரூ. 235/ வரை குறையும்.

இரண்டு மாத ங்களுக்கு 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்துபவர்களுக்கு இந்த 200 யூனிட் சலுகை பொருந்தாது; அவர்கள் வழக்கம் போல் 100 யூனிட் இலவச மின்சாரத் தைப் பெறலாம்.

சிவகங்கை மாவட்டத்தில் அமலாக்கம்:

இத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் ஒரு தலைமை மின்பகிர்மானமும், அதன் கீழ் சிவகங்கை, காரைக்குடி, மானாமதுரை, திருப்பத்தூர் ஆகிய 4 துணை மின்பகிர்மான உட்பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன. இத் துறைகளின் வழியாக மாவட்டம் முழுவதும் சுமார் 3 லட்சம் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் நேரடியாகப் பயன் பெற்று வருகின்றனர். இதன் மூலம் மிச்சமாகும் தங்களது மாதாந்திர மற்றும் இரு மாதப் பணத்தை மற்ற குடும்பத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடிகிறது எனப் பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பயனாளிகளின் நெகிழ்ச்சிப் பக்கங்கள்:

பா. கவிதா (காஞ்சிரங்கால் ஊராட்சி):

"நாங்கள் காஞ்சிரங்கால் ஊராட்சி, முத்துச்சாமி தெருவில் வசித்து வருகிறோம். என் கணவர் கொத்தனார் வேலை செய்கிறார், நான் தினக்கூலியாக வேலை பார்க்கிறேன். குடும்பச் செலவுகள் அதிகமாக இருந்த இந்தச் சூழ்நிலையில், மின்கட்டணம் செலுத்துவது பெரும் சிரமமாக இருந்தது. தற்போது இந்த 200 யூனிட் இலவச மின்சாரத் திட்டம் எங்களது குடும்பச் செலவைக் குறைத்து, சேமிப்பை அதிகரிக்க வழிவகை செய்துள்ளது. இத்திட்டத்தைத் தந்த முதலமைச்சருக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்."

ரா. அகிலா (நாட்டரசன்கோட்டை பேரூராட்சி):

"நாட்டரசன்கோட்டை கண்ணாத்தாள் கோவில் தெருவில் வசிக்கும் எங்கள் குடும்பத்திற்கு என் கணவரின் கூலி வேலை வருமானம் தான் வாழ்வாதாரம். அதில் மின்கட்டணம் கட்டுவது சிரமமாக இருந்த நிலையில், இந்த 200 யூனிட் கட்டணமில்லா மின்சாரத் திட்டம் எங்களைப் போன்ற நடுத்தரக் குடும்பங்களுக்குப் பெரும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இந்த மக்கள் நலத் திட்டத்தை வழங்கிய முதலமைச்சருக்குப் பொது மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

# வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி



மாதவரம், ஜூலை.04-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் அரசு ஆதிதிராவிட நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் சத்யம் தொண்டு அறக்கட்டளை சார்பில் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி நிகழ்ச்சி சத்யம் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனரும் பள்ளி மேலாண்மைக்குழுவின் தலைவியுமான எஸ்.கலைமணி ஏற்பாட்டில் பள்ளியின் தலைமை ஆசிரியர் கிருஷ்ணன்குட்டி தலைமையில் நடைபெற்றது.முன்னதாக பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர் பூவராகவன் அனைவரையும் வரவேற்றார். சத்யம் தொண்டு அறக்கட்டளை செயலாளர் நேசமணி, துணை செயலாளர் கற்பகம், பொருளாளர் ஒண்ணாப்பு, ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மணலி புதுநகர் சட்டஒழுங்கு ஆய்வாளர் புருஷோத்தமன் கலந்துகொண்டு பள்ளி மாணவர்களுக்கு போதைப்பொருள் பயன்படுத்துவதால் பாதிப்புகள் குறித்து தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பின்னர் போதைப்பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். இதில் மாணவர்கள், சக ஆசிரியர்கள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள், பள்ளி மேலாண்மைக்குழு பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். முடிவில் முதுகலை தமிழ்ஆசிரியர் குமரகுரு அனைவருக்கும் நன்றி கூறினார்.



# 15 பழைய காவல் வாகனங்கள் பொது ஏலத்தில் விற்பனை

சிவகங்கை, ஜூலை.04-

சிவகங்கை மாவட்ட காவல் துறையில் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட 15 பழைய காவல் வாகனங்கள் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்கான உத்தரவை சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா. சிவ பிரசாத், பிறப்பித்துள்ளார்.



இந்த ஏலம் ஜூலை 14 காலை 10 மணி அளவில் சிவகங்கை மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் நடைபெறும். ஏலத்தில் 5 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 10 இருசக்கர வாகனங்கள் இடம்பெறுகின்றன.

ஏலத்திற்கு முன், அதே நாளில் காலை 8 மணி முதல் வாகனங்களை பார்வையிடலாம். ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் காலை 6 மணி முதல் 10 மணி வரை ரூ.1,000 முன்பணம் செலுத்தி பெயரை பதிவு செய்ய வேண்டும்.

ஏலம் எடுத்தவர்கள், ஏலத் தொகையுடன் ஜி.எஸ்.டி. வரியையும் அன்றே முழுமையாக செலுத்த வேண்டும். GST பதிவு பெற்றவர்கள் மட்டுமே இந்த பொது ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள் என காவல்துறை அறிவித்துள்ளது.





# ஆசிப் பிரியாணி பெருங்குடி கேசி ஃபுட் ஸ்ட்ரீட் ல் பிரம்மாண்ட திறப்பு விழா

சென்னை, ஜூலை.04-

சென்னை, ஆசிப் பிரியாணி பெருங்குடி, கந்தன் சாவடி, வெங்கடேஸ்வரா காலனி, எம்ஜிஆர் மெயின் ரோட்டில் உள்ள கேசி புட் ஸ்ட்ரீட் ல் மிகப் பிரம்மாண்டமாக திறக்கப்பட்டது. ஜூலை 3 மற்றும் 4ஆம் தேதி முதல் ஒரு சிக்கன் பிரியாணி வாங்கினால், ஒரு சிக்கன் பிரியாணி இலவசமாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் கிளைகள் போரூர் பெரமண்ட்1 ஐடி பார்க் லும், வேளச்சேரி கிராண்ட் மாலிலும், கோயம்பேடு பஸ் நிலையம் எதிரிலும் இன்னும் பல இடங்களில் சிறப்பான நிறுவனங்களாக விளங்கி வருகிறது. ஆசிப் பிரியாணி அறுசுவை நிறைந்த சிக்கன் மற்றும் மட்டன் பிரியாணிகளை தயார் செய்து பொது மக்களுக்கு வழங்குவதில் தலைசிறந்த நிறுவனமாக திகழ்ந்து வருகிறது.


## மருத்துவர் தினத்தில் நெகிழ்ச்சி:

# மருத்துவக் கல்லூரிக்கு உடல் தானக் கடிதம் வழங்கிய டாக்டர் மீனாட்சி நடராஜன்!



சிவகங்கை, ஜூலை.04-

"வாழும் வரை சேவை... மறைவிற்குப் பின்னும் மனிதகுல நலனுக்காக சேவை!" என்ற உன்னத நோக்கத்தோடு, அன்னதானம், ரத்ததானம் போன்ற உயர்ந்த தானங்களையும் தாண்டி, மனிதநேயத்தின் உச்சமாகத் திகழும் உடல் தானத்தை முன்மொழிந்து முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார் ஒரு பெண் மருத்துவர்.

தேசிய மருத்துவர் தினமான ஜூலை 1, 2026 அன்று, காரைக்குடி அருகே உள்ள கானாடுகாத்தானைச் சேர்ந்த 73 வயதுடைய மருத்துவர் மீனாட்சி நடராஜன், தாம் மறைந்த பின்னரும் தனது உடல் மருத்துவக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் பயன்பட வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் ஒரு முக்கிய முடிவை எடுத்துள்ளார்.

அதன்படி, தனது உடலை சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி உடற்கூறியல் (Anatomy) துறைக்கு தானமாக வழங்குவதற்கான அதிகாரப்பூர்வ ஒப்புதல் கடிதத்தை அவர் வழங்கினார். எதிர்கால மருத்துவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மருத்துவ அறிவியல் மேம்பாட்டிற்கும் இவரது இந்த தன்னலமற்ற அர்ப்பணிப்பு ஒரு பெரும் உத்வேகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மருத்துவர் மீனாட்சி நடராஜனின் இந்த உன்னத செயலைப் பாராட்டி, சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் செல்வராஜன் அவருக்குப் பொன்னாடை அணிவித்து, வாழ்த்துச் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

இந்த நெகிழ்ச்சியான நிகழ்வின் போது, மருத்துவக் கல்லூரியின் துணை முதல்வர், நிலைய மருத்துவ அலுவலர் (RMO) மற்றும் துறை சார்ந்த பேராசிரியர்கள் உடனிருந்தனர். மறைவிற்குப் பின்னும் சமூகத்திற்குப் பயனளிக்கத் துடிக்கும் மூத்த மருத்துவரின் இந்தச் செயல் பொதுமக்களிடையே பெரும் நெகிழ்ச்சியையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

# தேனி மாவட்டம் தென்கரை மற்றும் வடுகபட்டி பேரூராட்சிகளில் ரூ. 2.20 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணி

## மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு!



பெரியகுளம், ஜூலை.04-

தேனி மாவட்டம், தென்கரை மற்றும் வடுகபட்டி பேரூராட்சிகளில் பேரூராட்சித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், தென்கரை பேரூராட்சிக்குட்பட்ட கைலாசப்பட்டி பகுதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டு புதிதாக கட்டப்பட்டு வரும் சமுதாயக்கூடம் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, அதன் தரத்தன்மை குறித்து ஆய்வு செய்ததுடன், பணிகளை உரிய காலத்திற்குள் முடித்திட தொடர்புடையத் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, அப் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்திற்கு நேரில் சென்று குழந்தைகளின் கல்வித்திறன் குறித்து கேட்டறிந்தார். மேலும், புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர், தென்கரை பகுதியில் செயல்பட்டு வரும் சுகாதார வளாகத்தினை பார்வையிட்டதுடன், பொதுமக்களின் தேவைகளுக்கு ஏற்ப உட் கட்டமைப்புகளை மேம்படுத்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வடுகபட்டி பேரூராட்சிப்பகுதியில் ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் எரிவாயு தகனம் மையக் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன், கட்டுமானப் பணிகளின் தரத்தன்மை குறித்து ஆய்வு செய்து, பணிகளை உரிய காலத்திற்கு முடித்திடவும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) வில்லியம் ஜேசுதாஸ், உதவி செயற்பொறியாளர் அம்சா, வடுகபட்டி பேரூராட்சிமன்றத்தலைவர் .நடேசன், செயல் அலுவலர் (தென்கரை பேரூராட்சி) சின்னச்சாமி பாண்டியன், உதவிப்பொறியாளர். நடராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வருவாய் கோட்டாட்சியர்**
**திருவள்ளூர் மாவட்டம்**

ஜெகன்னாதன்
த/பெ. பாப்பைய்யா
NO.5/1.கீழ்கம்மார்
பாளையம் கிராமம்
திம்மபூபாலபுரம் POST
ஊத்துக்கோட்டை TK.
திருவள்ளூர் மாவட்டம் 602023
மனுதாரர்

எதிர்

1.வருவாய் கோட்டாட்சியர் திருவள்ளூர்
2.வருவாய் வட்டாட்சியர் ஊத்துக்கோட்டை.
எதிர்மனுதாரர்

பொதுஅறிவிப்பு

மேற்கண்ட விலாசத்தில் நான் நிரந்தரமாக வசித்து வருகிறேன் என்னுடைய பெரிய தாயார் பெத்தநாகம்மா க/பெ.முனுசாமி என்பவர் 10.07.2003 அன்று மேற்கண்ட விலாசத்தில் இறந்து விட்டார். என் அறியாமை காரணமாக இறப்பை பதிவு செய்ய தவறி விட்டேன் எனவே எனது பெரிய தாயார் பெத்தநாகம்மா இறப்பை பதிவு செய்து இறப்பு சான்று வங்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் இதற்கு யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் 15 நாட்களுக்குள் வட்டாட்சியருக்கோ அல்லது கோட்டாட்சியருக்கு தெரிவிக்கவும் இல்லையெனில் ஒருதலை பட்சிமாக முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்

**ஜெகன்னாதன்**
**த/பெ.பாப்பைய்யா**
**கீழ்கம்மார் பாளையம்**

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161